padippakam

# தூண்டில்

2

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1



- இன்றைய வானம்பாடிகள் -

படிப்பகம்

padippakam

# தடம்


ஆசிரியர்
வெம். வௌஸர்

இதழ் - 02
27 பங்குனி 1992

உதவி ஆசிரியர்
கருங்கொடியூர் கவிராயர்

அட்டைப் படம்
யேவலி தைலூர்

தொடர்பு
ஆசிரியர்
"தடம்"
இல 27, A V V வீதி
அக்கரைப்பற்று - 02



தருகை 15/-

"படைப்புகளுக்கு, ஆக்கியோனே பொறுப்பு"

படிப்பகம்

padippakam

□ 01 □

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

***'மனிதம்' என்ற விலகாத புள்ளியில் . . .***

உரத்து முழங்கும் போலிகளினிடையே, இன்று தேசிய இனப் பிரச்சினையானது மக்களையும் நாட்டையும் பாரிய பின்னடைவுக்கு தள்ளியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் செயல் ரீதியாக முன் னெடுத்து செல்லப்பட வேண்டுமென வெறுமனே பிதற்றிக்கொண் டிருப்பதனால் சமாதானத்திற்கான உன்னத நிலையை நம்மால் ஒரு நாளும் எட்டிவிட முடியாது.

இந்தச் சூழ்நிலையில் கலைஞர்களினதும், எழுத்தாளர்களினதும் பங்கு என்ன? கலைஞன் என்பவன் ஒரு சமூகத்தின் கண்ணும் காதும் மனச்சாட்சியுமாவன் என்பதை ஒவ்வொரு கலைஞனும் பிரஞ்ஞை பூர்வமாக சிந்திப்பானேயானால்; அவனது பங்களிப் பானது இன்றைய நிலையில் அவசியமானது என்பதை அவன் அறியாமல் இருப்பதற்கான நியாயங்கள் இல்லை. தீர்வுக்கான சாத் தியங்கள் காலப்போக்கில் மறைந்துவிடும் என்ற சூழ்நிலையின் பிற் பகுதியில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உக்கிர வாழ்நிலை தொடரும் இந்த மண்ணில், தொடர்ந்தும் நாம் பெரிதும் மௌனமாக இருப்பது இந்த பிரளயத்திற்கான முடிவாக அமையாது.

எழுத்தாளர்கள் கலைஞர்களாகிய நாம், நம்மீது கவிந்துள்ள பாரிய வரலாற்றுப் பணியை முன்னேடுத்துச் செல்லல் வேண்டும், இதுவே நமது மனித சமூகத்திற்கு நாம் செய்யும் தார்மீக பங்களிப்பாகும். இந்தமண்ணில் முஸ்லீம்களும், தமிழர்களும், சிங்களவர்களும் சமாதானம் சௌஜன்யத்துடன் வாழும் சூழ் நிலையை உடனடியாக தோற்றுவிக்க வேண்டும்.

நாளைய பரவசப் பொழுதுக்கு நம்மால் இயன்ற பணியை செய்ய நாம் ஒருமித்து முன்வரல் வேண்டும்.

ஆசிரியர்.

படிப்பகம்

padippakam



# எழுவான் கதிரின் ஒரு நாள் பொழுது!

அன்புடீன்

திசை தெரியாத பறவைகளாய்
திசை மாறி
ஓடிக் கொண்டிருப்பவர்களில் ஒருவனாகி
நானும் ஓடிக்கொண்டிருக்கிறேன்....

'என்ன நடந்தது?'
நடந்தது என்ன?'
எவருக்கும்
எதுவும் தெரியவில்லை!

உயிரின் விலை?
மரணம்!
மரணத்தின் விலை?
சொர்க்கம்! அல்லது நரகம்!

விலையில்லாத உயிருக்கு
விலை பேசும் படலம்
ஆரம்பித்து விட்டது

உடலில் எந்த இடத்தில் இருக்கிறது
என்று தெரியாத உயிரை
உடலில் வைத்துக் கொண்டு
எங்கே ஓடுவது...?
எப்படி ஓடுவது...?
எத்தனை தூரம் ஓடுவது....?

அறிந்த முகங்கள் கூட
அந்நிய முகங்களாகி
அவசரப் படுகின்றனவே ....

ஜீப் வண்டியின் இரைச்சல்
சப்பாத்து கால்களின் சப்தம்
கதவடைப்பு
கடையடைப்பு
கண்ணீர்ப்புகை

புற்றீசல்களாய்
புறப்பட்டு வந்த
தனியார் வாகனங்கள் கூட
புகை கக்காமலும்
புழுதி கிளம்பாமலுமா
புறப்பட்டுப் போயின...?

விலை இல்லாத உயிருக்கு
விலை பேசும் படலம்
ஆரம்பித்து விட்டது!

உடலின் எந்த இடத்தில் இருக்கிறது
என்று தெரியாத உயிரை
உடலில் வைத்துக் கொண்டு
எங்கே ஓடுவது...?
எப்படி ஓடுவது...?
எத்தனை தூரம் ஓடுவது...?

''மரணத்துக்குப் பயமில்லை
உயிரைப் பற்றியும் கவலையில்லை.''
நேற்று பேச்சுவாக்கில் சொன்ன
இந்த வார்த்தைகள்தான்
எவ்வளவு பொய்யானவை;
போலியானவை!
இன்று அவை இரண்டுக்காகவுமே
திசை தெரியாத பறவைகளாய்
திசை மாறி
ஓடிக் கொண்டிருப்பவர்களில் ஒருவனாகி
நானும் ஓடிக் கொண்டிருக்கிறேன்.,...

*1990 - 06 - 11*

படிப்பகம்

padippakam



# நானும், தமிழக முன்னோடி எழுத்தாளர் லா. ச. ராவும்

ஒட்டமாவடி எஸ். எல் . எம் ஹனிபா

'தடம்' கிடைக்கப் பெற்றேன். அதன் எளிமையான கோலம் மனதிற்கு பரவசமூட்டியது. கலை என்பதின் முழுமை யான அர்த்தம் அவற்றை அனுபவிக்கின்ற வாசகனுக்கு விடுதலையையும் பரவசத்தை யும் அளிப்பதுமட்டுமல்ல, அதனூடாக ஏதோவொரு செய்தியையும் எத்திவைக் கின்ற தர்மமும் வேண்டும்.

மாறாக இலக்கியத்தில் பிரகடனங்களும், ஒப்பந்தங்களும் தேவையில்லாத சமாச் சாரங்கள், சத்தியமும் கலைத்துவமும் கலை இலக்கிய சுவைத்தலுக்கான சுரப்பி களாகும். அந்தவகையில் எழுத்துலகில் இன்று ஒரு பொறியாக திகழ்பவர் திரு வாளர் சுந்தரராமசாமியாகும். அண்மை யில் அவர் எழுதி வெளியிட்டுள்ள ந. பிச்ச மூர்த்தியின் ''கலை இலக்கியமரபும் மனித நேயமும்' எனும் நூல் படைப்புலகில் ஆய்வு ரீதியில் ஒருபுதிய கண்திறப்பாகும். கவிதை பற்றி தமிழில் இதுவரை யாரும் தொடாத ஆரோக்கியமான பல கருத்துக்களை முன் வைத்துள்ளார்.

இவற்றை ஏன் எழுத வந்தேன் என்றால்_ வானத்தைக் கீறி வைகறையில் பறித்தெடுப் போம். மோனக் கூரைக்குள் முழங்கும் இடி விதைப்போம். சூரியனைக் கண்களால் சுட்டெரிப்போம். நமது சிறகசைப்பில் ஞால நரம்பதிரும்.

என்றெல்லாம் பெரும் இடி முழங்களுடன் சிறகடித்த வானம்பாடிகள்- பின்னாட்களில் ஆளுக்கொரு திசையில் திக்குத்தெரியாமல் - தங்கள் முகங்களைத் தாங்களே தொலைத்துக் கொண்டது மட் மல்லாது இலக்கிய கூட்டங்களில் கூள் முட்டை வீசும் புதிய பிரகடனங்களையும் தமிழ் இலக்கியப்பரப்பில் இறக்கி வைத் தார்கள்.

அத்தகைய வானம்பாடிகளின் வழிநமக்குப் படிப்பினையாக அமைய வேண்டுமே யொழிய பாதையாக இருந்து விடக் கூடாது.

மற்றப்படி 'தடம்' எல்லாவகையிலும் ஒரு புதிய தோற்றத்தின் தரிசன அவசியத்தைக் கோடிகாட்டுகிறது. ஆனால் அந்த எண்ணம் 'இன்றைய வானம்பாடிகள்' என்று முன் பக்க அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள பிரகடனத்தைப் படித்தும் சிதறுன்று போய் விட்டது.

நமக்கு இரவல் தேவையில்லை நமது 'ஓரிஜினை' எந்த நிலையிலும் சோரம் போக விடக் கூடாது.

அடுத்து,''பௌசரின்'' கதையைப்படித்ததும் அண்மையில் தினமணிக்கதிரில் லா. ச. ரா. எழுதி வெளிவந்துள்ள 'சங்கு புஸ்பம்' கதையின் நிகழ்வு பொறியில் சிக்குண்டது. சென்ற ஜனவரியில் - சென்னையில் நான் லா. ச. ராவைக் சந்தித்த போது - எமது பேச்சு எங்கெல்லாமோ சுற்றிப்பார்த்து முடிவில் மரணம் பற்றிய ஸ்தாயியில் சங்க மித்தது.

மரணத்தை எதிர் கொண்டழைக்கத் தரு ணம் பார்த்து காத்திருக்கும் அந்தக் கலை ஞன் கூறிய வார்த்தைகள் முழுவதையும்

படிப்பகம்

padippakam



இங்கு எழுத்தில் கொண்டுவர இயலவில்லை எங்கள் பேச்சின் முடிவில் அவர் இப்படிச் சொன்னார். 'உங்களை வைத்து ஒரு கதை எழுதப் போகிறேன்' என்றார். சொல்லி யதைப்போல் மேலே நான் கூறிய கதையை எழுதி வெளியிட்டிருந்தார். ஒரு கதையில் அவர் மூன்று கதைகளை இணைத்திருந் தார். அந்தக்கதை ''பௌஸரின்'' கதையின் இன்னொரு அங்கமாக அமைந்துள்ளது விசித்திரமானதோர் உணர்வின் ஒன்று கூடலோ?

கதையின் ஒரு பகுதி இதுதான் படித்துப் பாருங்கள்.

ஒரு ஸ்ரீலங்கன் என்னைப் பார்க்க வந்திருந் தார். பேச்சு அவர் நாட்டு நிலைமை பற்றித் திரும்பாமல் முடியவில்லை

''நான் இந்தியாவுக்கு வந்து இரண்டுமாதங் கள் ஆகின்றன. மகனைப்பள்ளியில் சேர்க்க வந்தேன்.

''என்ன படிக்கின்றான்''

''பத்தாவது சேரப் போகிறான்''

''பத்தாவதுக்காக வந்தீர்கள்? ஏதாவது காலேஜுக்குப்ரயத்னம் பண்ணுகிறீர்கள் என்று நினைத்தேன்.''

''காலேஜா பள்ளிகளெல்லாம் எப்பவோ மூடியாச்சு பையன்களுக்குப் படிப்புக்கிடை யாது. எல்லோரும் போருக்குப் போகிறார் கள்.''

பேச்சை மாற்றும் முறையில் ''உங்கள் நாட்டு இலக்கியம் எப்படியிருக்கிறது?''

''உரைநடையைக் காட்டிலும் கவிதை நன் றாயிருக்கிறது. அங்கே புதுக்கவிதை மிகச் செழிப்படைந்து இருக்கிறது''.

''அப்படியா?'' (கவிதையில் நான் சூனியம்)

''இதோ பாருங்கள் ஒரு புதுக் கவிதை, துப்பாக்கியை தூக்கி விட்ட ஒரு குழந்தை வாயில் கவிஞன் தன்வார்த்தைகளை வைக் கிறான்.

''என்விரோதிகளை
என் நண்பர்கள்
எனக்குக் காட்டுவார்கள்
அப்போது நான் சுடுவேன்''.

இதில் பாருங்கஅந்தப் பிள்ளைக்கு தன் விரோதிகள் யார் என்று கூடத்தெரியாது. ஆனால் துப்பாக்கி தூக்கிவிட்டது. இதை விடப் பரிதாபம் என்ன வேண்டும் எங்கள் நிலமை இப்படித்தானிருக்கிறது. நண்பர் கூட யாரென்றறியோம். இந்தக் கவிதை யில் அதுவும் சூசகமாக உணர்த்தப்பட்டி ருக்கிறது. அல்லது நாம் அறிய வேண்டும்''. அவர் கொடுத்த விளக்கம் எனக்குத் 'திக்' கென்று ஆகிவிட்டது.

தொடர்ந்தார்.

''நண்பர் யார்? விரோதியார்? அறியாமலே தினம் மரணத்துடன் புழங்கிக் கொண்டிருக் கிறோம். மரணம் அண்டை வீட்டில் தங் கியிருக்கின்றான். எந்தப் பக்கத்து அண்டை வீடு? முன் வீடா? பின்வீடா? பக்கத்திலா? தெருக்கோடியிலா? ''Death is my Neigh bour'' அவ்வப்போது கதவைத் தட்டுகி றான். உடைக்கிறான் அதனால் திறந்து விட முடியுமா? ஆயினும் அண்டை வீட்டு உறவாச்சே!

சிரித்தார் - ஆனால் அந்தச் சிரிப்பில் கசப்பு இல்லை. எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

''இத பாருங்க மனைவி சமையல் செய்து கொண்டிருப்பாள். திடீரென்று அபாயச் சங்கு ஊளையிடும். அடுப்பை தணிக்கக்கூட

படிப்பகம்

padippakam



நேரமிருக்காது. ஓடி ஒளிந்து கொள்வோம் All Clear ஒலித்து வெளிவந்து பார்த்தால் வானலியில் பண்டம் தீர்ந்து போயிருக்கும் அடுப்பு எரிஞ்சுட்டிருக்கும் சில சமயங்களில் குண்டு விழாமலே அடுப்பிலிருந்து தீ இசை சேடாய்ப்பற்றிக் கொள்ளவும் வழியுண்டு இதுதான் மரணத்தின் அண்டை வீட்டு உறவு.

மரணத்திற்குத் தனிப்பயம். அதன் மேல் சீற்றம் எல்லாம் எங்களுக்கு விட்டுப்போச்சு தினம் அத்துடன் வளையவருகிறோம். அது தான் தெரியும். இது உறவுதானே! வீட்டுள்ளேயே தகப்பன் மகனுடன் பேசாமல் மகன் தாயோடு பேசாமல், சகோதரர்கள் பேசிக் கொள்ளாமல் குடும்பங்கள் இல்லையா? காரியங்கள் நடக்கவில்லையா?. அது போன்ற உறவு. 'Death my Brother whowill not Speak to me but is waiting to embrace me.

நான் ஒரு வீடு கட்டினேன். நாலுலட்ச ரூபாயில் வட்டிக்கு வாங்கிக் கட்டினேன். பால் காய்ச்சிக் குடித்தாயிற்று. நாளைக்கு குடிபுக வேண்டும். மறுநாள் மூட்டை முடிச்சுகளுடன் போய்ச்சேர்ந்தால் வீட்டைக் காணோம்.

ஒரு சுவர் கூட அடையாளத்துக்கு இல்லை. தரைமட்டம்.

''எப்படியிருந்திருக்கும் உங்களுக்கு?''
''என்னால் நினைத்துப் பார்க்க முடியல்லே அசட்டுக் கேள்வி. மன்னித்து விடுங்கள்''
''அதைத்தான் சொல்ல வருகிறேன். நீங்கள் நினைக்கிற மாதிரியில்லை. புது வீட்டுக்கு அண்டைக்காரன் Bomb விழுந்ததில் இறந்து போனான். மோசம் போயிட்டான் நான் உயிருடன் இருக்கிறேன் அல்லவா! அது நன்றிக்குரிய விசயம் அல்லவா! - அடுத்து அதே மூச்சில் ஆவேசத்துடன் அப்பவும் நாங்கள் லா. ச. ராவைப்படிப்போம்.
அதிர்ந்து போனேன். என்னை அறியாமல் என் கைகள் கூப்பிக் கொண்டன. எனக்குக் குரல் தழுதழுத்தது.

''என்னையும் உங்களையும் சேர்த்துச் சொல்லாதீர்கள் நீங்கள் செயல் வீரர்கள் நான் என் மூலையில் உட்கார்ந்து கொண்டு தட்டான் சுத்தியால் எழுத்தைத் தட்டிக் கொண்டு என்னத்தைச் செய்து விட்டேன்?
''நீங்கள் நினைக்கிற மாதிரியில்லை. எங்கள் நாட்டில் நிறைய மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கல்வியை மேலும் மேலும் படித்துக் கொண்டிருப்பதுதான் எங்கள் முதலீடு. எங்களுக்கு மனிதர்கள் வேண்டும் உறவு வேண்டும் மரணத்தின் அருகாமையே எங்கள் உறவை இன்னும் இறுகப் பிணைத்து விட்டது. எழுத்தைக் காட்டிலும் மனித உறவுக்கு பிணைப்பு எது?

கால், இடம், கடல் தாண்டியும் எழுத்தால் தானே நாம் ஒருவரையொருவர் தொட்டுக் கொள்ள முடிகிறது! இதோ இந்தப்புத்தகம் உங்கள் நாவல் 'கழுகு' புத்தகத்தை எடுத்து ஆட்டினார். விலை 20 - 50 போட்டிருக்கிறது. எங்கள் நாட்டில் இது போல் நாலு பங்கு விலை. அப்படியும் கிடைத்தால் வாங்கிப்படிப்பவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

இது 'நான்' இன் ஆவேசம் இல்லையா? நம்பிக்கையின் தரிசனம்.

படிப்பகம்

padippakam



நம்பிக்கையிலிருந்து விளைவது தைரியம். ஹெமிஸ்வே தைரியத்தை (Cour Age is) 'Grace Under Pressure' என்கிறான். வீடு எழும்பினதும் சாரத்தைத் தட்டி விடுவது போல நம்பிக்கையைத் துறந்து தைரியம் விரக்தி.
துல்லியமான நான்

இலங்கை நண்பர் இதைத்தான் சித்திரிக்கிறார். அல்லது அதுவாவே விளங்குகிறாரா?
(24-3-91 தினமணிக்கதிர்)
இதுவே கதை. இரண்டு கதைகளையும் இணைத்து படியுங்கள். அபூர்வமான ஓர் உணர்வு பொங்கி எழும்.

---

## அன்பானவளுக்கு ஓர் அஞ்சல் . . .

கருங்கொடியூர் கவிராயர்

மாமி மகனே!
மருக்கொழுந்து
ராசாவே!
கொத்தன் பூவாய்,
இங்கோர் . . .
மச்சி துடித்திருக்க
மச்சானே! ஒங்க
நெஞ்சக் கல்புக்குள்
என்னெனவு
மண்ணில் அளவேனும்
இல்லைபோல் தெரிகிறது.

☆

போன வருசம்
கிணத்தடியில் நாம
மண்கூட்டி வச்ச
மல்லிகையும் பூத்திருக்கு
ஆகையினால்; மன்னவரே!
மாராப்புக் கொண்டையில
மல்லிகைப்பூச் சூடுதற்கு
கட்டாயம் நீங்கள்
வாசலுக்கு வந்திடணும்,
என்று நீ தொடுத்த . . .
அன்பான அஞ்சலுக்கு . . . !

☆

சொல்லால் புரியாத
பணியொன்றைச்
செய்வதற்கு
புறப்பட்டுப் போனதினால்
வரமாட்டேன்
எனும் பதிலை
வரைகின்றேன்.

☆

போன வருசம்
பூத்துக் குலுங்கையிலே
சோத்துக் கையோடு
சனங்கள் ஓடியதும்
பட்டாசுச் சத்தம்போல்
துவக்கு வெடில்
கிளம்பியதும்
வயல் வரம்பு
காடு எல்லாம்
மெசின் பெட்டி
கொண்டு சென்று
மையத்துத் தேடினதும்,
எந்தன் நினைவினிலே
இன்னுந்தான் இருக்கிறது.

☆

எங்கள் இனத்தவரின்
சூடு பொரை
எத்தனையோ!
பறண்கள் கட்டு எத்தனையோ
தீயிட்டுக் கொழுத்தியதும்

படிப்பகம்

padippakam



புட்டம்பை நகரத்து
பொண்டுகளும்
பிள்ளைகளும்
மண்ணையிழந்து
மண்டியிட்டு அகதிகளாய்
முறாவடைக்குள்ள
கொண்டு வந்து நிறுத்தியதும்
எந்தன் கல்பினிலே
கங்குல் பகலாக
கடும் சாபம் இடுகிறது.
ஆசையினால் மல்லிகையே!
மாமி பெத்த நங்கணமே!
மூணாம் பொறை அழகே!
வரமாட்டேன்
எனவுரைத்தல்
மனமாறியில்லையடி.

☆

முந்திப் போலுந்தன்
வாசலில் நான்வந்து
பின்னிலவு நேரம்
பாயில் அமர்ந்திருந்து
உந்தன் தாவணியில்
மின்னல் போல் பாய்து
பின்னல் மயிர் கோதி
கன்னத்தில் முத்தமிட்டு
சாமக் கோழியது
கூவுகிற நேரம்வரை
மடியில் தலை வைத்து
மயக்கத்தில் நாமிருக்க
மறுமொழிக்கு நீ முனக.
மச்சி இப்போது
உண்மையில நேரமில்ல.

☆

நேத்திரவு பூத்த
நெருஞ்சிப் பூப் பல்லழகி
கன்னடத்துப் பைங்கிளிபோல்
கதை பேசும் என்னவளே!
கையோடு கைபற்றி...
பௌர்ணமியில் கடற்கரையில்
உலாவி வர
ஆசை எனக்கிருந்தும்;
என்ன செய்வேன்
நம் சமூகப்பாதை
இருளில் கிடக்கிறது
குன்றும் படுகுழியும்
வழி நெடுகும் இருக்கிறது
நம்மவரின் எதிர் பார்ப்பு
எத்தனையோ
நான் செய்ய உள்ளதினால்
வரமாட்டேன் எனும்பதிலை
மறுபடியும் எழுதுகிறேன்.

☆

என்பாதம் போவதிப்போ
பூப்போட்ட பாதையல்ல,
கல்லாலும் முள்ளாலும்
கரடு முரடானதுதான்;
இத்தனையும்
தெரிந்த பின்பும்
என்னுடன் கை
பற்றிவர முடியுமெனில்
வந்து விடு இல்லையெனில்
என்னெனவ
இன்றோடு விட்டு விடு.

☆

எங்கோ ஒரு மூலையிலே
ஏங்கும் என் காதலியே!
மச்சானைக் கைப்பிடித்து
மகிழப்பூ வாசனையில்
மெத்த சுகமடைந்து
பொறந்த போற்றுக்கு
பிள்ளை குட்டி பெற்று

படிப்பகம்

padippakam



கூடி வாழ்ந்திடலாம்
கட்டாயம் நீங்கள்
வந்திடனும் வாசலுக்கு
என்று நீ தொடுத்த
அன்பான அஞ்சலுக்கு
வரமாட்டேன்
எனும்பதிலை
மறுபடியும் எழுதுகிறேன்.

☆

பகலிரவாய் நாங்கள்
கூடிக்கதைப்பதையும்
போஸ்டர்கள், பிரசுரங்கள்
ஒட்டி வருவதையும்
பத்திரிகை என்று
கதை, கவிதை எழுதுவதை
பகடி பண்ணி
புலம்பி எழுதியுள்ளாய் . . . !

☆

உந்தன் மடியினிலே
தலை வைத்துப் படுப்பதுவும்
நகை நட்டு வாங்கி
அலங்கரித்துப் பார்ப்பதுவும்
எந்தன் பெரு வேலை
என்றோ நீ கருதுகிறாய்!
உன்னை அணைத்து
உள்ளூர்க் கதை பேசி
மெல்லச் சிரித்து
மேனியெல்லாம்
இதழ் பதித்து
கிள்ளி விளையாட
ஆசை எனக்குமுண்டு
நாளை நம் சமூகம்
புலர் பொழுதைக்
காண வைக்கப்
புறப்பட்டுப் போனதினால்
வரமாட்டேன்
எனும் பதிலை வரைகிறேன்!

☆

கண்ணே! என் கண்மணியே !
நான் செல்லும் பாதையில்
இடர்கள் நிறைந்திருக்கு,
ஆகையினால்
சேதி வரும் செத்தனென்று
இல்லையெனில் . . .
காலம் வரும் காத்திருப்பாய்
நேரம் வரும் சேர்ந்திடலாம்.
நாளை ஒரு பொழுதில்
நம் சமூக விடுதலையில்
நீயும் என் கரம்பற்றி
நாணமுடன் தோள்பற்றி
மேனி சிலிர்ப்படைந்து
மெத்த சுகம் பெறுவாய்
பூத்திருந்த விழிகள்
ராத்திரியை எண்ணி
ராகங்கள் பாடும்;
காலம் வரும் கண்ணே!
பொறுத்திருப்பாய் . . .
சேதி வரும் உன்னைத்
தேடி வரும் ஓலை,

---

இதழ் - 02 27 - பங்குனி 1992

## சந்தா விபரம்

1 ஆண்டுச் சந்தா

| | |
|---|---|
| 6 இதழ் - | 90.00 |
| முத்திரை - | 10.00 |
| | 100.00 |

அரையாண்டுச் சந்தா

| | |
|---|---|
| 3 இதழ் - | 45.00 |
| முத்திரை - | 5.00 |
| | 50.00 |

படிப்பகம்

padippakam



## யுகங்கள் கணக்கல்ல

☆ கவிதா

கதவு சிறிது திறந்திருக்கிறது. அதன் வழியே மீரா கட்டிலில் குப்புறப் படுத்திருப்பது நன்றாகத் தெரிகிறது. அவளை அந்த நிலையில்தான் பார்ப்போம் என்று நான் எதிர்பார்க்காமல் இல்லை. ஆனாலும் ஆத்திரம் பற்றிக் கொண்டு வரத்தான் செய்தது. கீழுதட்டைப் பற்களின் இடையே கடித்துக் கொண்டு ''மீரா...'' என்று கூப்பிட்டேன். எவ்வளவோ முயன்றும் அந்தக் குரலில் இருந்த தேவையில்லாத பதட்டத்தை மறைக்க முடியவில்லை.

படபடவென்று வெள்ளை பேப்பர்களையும் பேனாவையும் தலையணைக்கடியில் திணித்துவிட்டு ''ஏனம்மா ..'' என்று கேட்டபடி அவள் எழுந்து வந்தாள். அவள் குரலிலும் அதே பதட்டம் தொனித்ததை நான் கவனிக்காமல் இல்லை.

''தம்பி அப்படியே சிமெண்டில் சாய்ந்து நித்திரையாய்ப் போயிருக்கிறான் சுவாமி அறைக்கு விளக்கேற்றச் சொல்லி எத்தனை நேரமாய்ப்போயிற்று? ஒன்றையும் கவனிக்காமல் அங்கே என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டேன், ஏதோ கேட்டேனே ஒழிய, கேட்டுவிட்ட பின் தான் மீரா உண்மையை என் முகத்துக்கு நேரேயே கூறிவிடுவாளோ என்ற பயமும், அப்படிக் கூறிவிடக் கூடாதே என்ற தவிப்பும் ஏற்பட்டன.

''மத்ஸில் ஒரு பிராப்ளம் அம்மா, நாளைக்குச் செய்து வரும்படி ஒரு ஸ்ரூடன்ற் தந்தாள் - அதுதான்...'' என்று இழுத்தபடி மீரா நிற்காமல் நகர்ந்தாள். நான் அதிலேயே விறைத்து நிற்கையில் மீரா தோளில் துவளும் குழந்தையைத் தூக்கியபடி படுக்கையறைக்குப் போவது தெரிகிறது' நான் விரும்பினால் ஒரு நொடியில் அவள் அறைக்குப் போய் அவள் செய்து கொண்டிருந்த 'மத்ஸ்' ப்ராப்ளத்தின் சிக்கலை விடுவித்துவிட முடியும் ஆனால் அதன் பின்...? இவ்வளவு நாளும் என் அந்தரங்கத்துக்குள்ளேயே புதைத்துவிட விரும்பிய உண்மையை, எனக்குத் தெரியும் என்று அவளுக்கு முன்னால் நிரூபித்துக் கொண்டு அதன் மூலம் அவளை இந்தச் சிக்கலில் இருந்து மீட்டுக் கொள்ளும் ஒரேவழியை அடைத்துவிட நேருமா? இவ்வளவு இங்கிதமில்லாதவளாக நடந்து கொண்டு விட்ட பிறகு எந்த முறையில் என்னால் அவளைத் திருத்திவிட முடியப்போகிறது?

பின்னேரம் கிணற்றடிக்குச் சென்ற போது மீரா கிணற்றுக்கட்டின்மீது படுத்திருப்பது தெரிந்தது. அவள் இதழ்களில் இலேசான புன்னகை. ஒரு கையைத் தலைக்கடியில் வைத்து, மறு கையைக் கிணற்றினுள் விட்டபடி படுத்திருந்த அந்த நிலையிலும், சுற்றிலும் இருண்டு கொண்டு வருகின்ற அந்தச் சூழலிலும் அவள் நினைவுகள் இல்லை! கிணற்றினுள் நெளியும் வட்ட வட்டமான அலைகளில் யார் முகத்தைக் கண்டு அவள் அப்படிச் சிரித்துக் கொண்டிருக்கிறாளோ? யார் முகமோ? எனக்குத் தெரியாதா? மீரா! உன் சாதி என்ன? குலமென்ன? அவன்...?

படிப்பகம்

padippakam



உன் மாமா எப்படியடி இதற்குச் சம்மதிப்பார்? அவர்கள் வேண்டாமே நான் தான் எப்படி சம்மதிப்பேன்? சம்மதித்து விட்டு மற்ற பெண்ணை எங்கே கொண்டு போய்த் தள்ளுவேன்? வேண்டாம் மீரா, மறந்துவிடு! நீ...நீயாகவே உணர்ந்து அவனை மறந்துவிடு. நான் உன்னைப் பழைய மீராவாகவே நினைக்கிறமாதிரி நடித்துக் கொண்டிக்கிறேன். நீயும் உன் மனதில் இடையே முளைத்த அந்த சலனத்தை இடையிலேயே மறந்துவிட்டு பழைய மீராவாக மாறிவிடு!

மனதுக்குள்ளாகவே பேசிக்கொண்டு மெதுவாகப் பின் வங்கினேன். இருட்டி வெகு நேரமான பின்தான் மீரா வீட்டுக்குள் வந்தாள்.

ஒரு நாள் - வெள்ளிக்கிழமை - நான் கோயிலுக்குப் போய்விட்டு வந்தேன். மீராவைக் கண்ணில் காணவில்லை. சின்னப் பெண்ணிடம் ''அக்கா எங்கே''...? என்று கேட்டேன். ''மாட்டுக்கு வைக்கோல் போடப் போனாள்'' என்று கூறினாள். வீட்டுக்குள் எல்லாப் பொருட்களும் போட்டது போட்டபடியே கிடந்தன. எனக்கு ஆத்திரமாய் வந்தது நான் வெளியேறிய நேரம் தொடக்கம் மீரா உள்ளே இல்லை என்பததான் அதற்கு அர்த்தம். வெளியே இவ்வளவு நேரம் என்ன லயிப்பு வேண்டிக்கிடக்கிறது? எங்காவது தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பாள் என்று தெரியாத எனக்கு? காதல் கண்மூடிக் காதல்! டாக்டரின் மனைவியாகி விடலாம் என்ற நினைவில் சாதிவிட்டுச் சாதி போய்த் திருமனம் செய்து கொண்டு அம்மா, தம்பி, தங்கை, சுற்றம் எல்லாம் மறந்து தனக்காக மட்டும் மகிழ்ச்சியை எதிர்பாத்துக்கொண்டிருக்கிற கேவலமானவளாக நான் பெற்ற மகளைப்பற்றி நினைப்பது மனதுக்கே என்னவோ போல்த்தான் இருந்தது. தற்செயலாக ஜன்னலடிக்குச் சென்ற போது மாட்டுக்கொட்டகை தெளிவாகத் தெரிந்தது. கட்டைத் தென்னங்கன்றின் ஓலையைப் பிடித்தபடி வானத்து நிலவையே பார்த்தபடி மீரா நின்றுகொண்டிருந்ததும் தெரிந்தது. என் மனதில் எழுந்த கணநேர குருட்டு வெறியின் ஆக்ரோசத்தில் அவளை அப்படியே இழுத்து வந்து அறையலாமா? என்று தோன்றியது. உள்ளே வருகிற நேரம் வரட்டும் என்று காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினேன்.

சின்ன மகளும் மகனும் எட்டு மணிக்கு வந்தார்கள். ''அக்கா எங்கே?'' என்று சின்னப் பெண்ணிடம் மறுபடியும் கேட்டேன். ''அறையில் இருக்கிறா'' என்றாள் அவள். வழக்கத்தில் இவர்களுடனேயே சாப்பிட வந்துவிடும் அவள், வராதது என் மனதுக்கு நெருடலாகவே இருந்தது. ஒரு நிமிடம் அவள் தென்னங்கீற்றைப் பிடித்தபடி ஏக்கத்துடன் நின்ற காட்சி நினைவுக்கு வந்தது. மனம் வக்கரித்துக்கொண்டது. ஏன் இவளுக்கு இந்த வேண்டாத காதலும் ஏக்கமும்? இவளுக்குக் காதலைப் பற்றி என்ன தெரியும்? வெறும் மனமயக்கத்தைக் காதல் என்று எண்ணிக்கொண்டு பாழாப் போகத்தான்' என்று மனதோடேயே எண்ணிக்கொண்டு நேரே அவள் அறைக்குச் சென்றேன்.

நினைத்தபடி அவள் குப்புறப் படுத்து எழுதிக்கொண்டுதான் இருந்தாள். பக்கம் பக்கமாக எழுதிக் குவிப்பதற்கும் தனித்தனியாகப் பிரிந்துபோய் யோசித்துக் கொண்டு நிற்பதற்கும் அவளுள்தான் எத்தனை அந்தரங்கமோ?

''மீரா'' என்று குரல் கொடுத்தேன். அவள் பதறித் துடித்து எழவில்லை. என்னை ஒரு

படிப்பகம்

padippakam



முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு மறுபடியும் எழுதத் தொடங்கினாள். இரண்டு மூன்று வரிகள் எழுதியதும் கடிதம் முடிந்திருக்க வேண்டும். 'என்றும் உங்கள் மீரா' என்று கையெழுத்திட்டதை நான் பார்த்துக்கொண்டுதான் நின்றேன். அவள் தாள்களை ஒன்றாக்கி நிதானமாக மடித்தாள். பொங்கிவந்த ஆத்திரத்துக்கு அணையிட்டவாறு நின்றேன் நான். மடித்த கடிதத்தை ஒரு கவரில் செருகினாள். ''முடிவில் எல்லாம் முடிஞ்சு போச்சும்மா'' என்றால் பெருமூச்சுடன்.

எனக்கு ஆத்திரம் மாறி அந்த இடத்தைக் குழப்பம் எடுத்துக்கொண்டது. வார்த்தை எழும்பாமல் ஆயிரம் கேள்விகளைக் கண்களிலேயே வைத்து அவளைப் பார்த்தேன்.

''உங்களுக்கு எல்லாம் தெரியும் என்று ஏனக்குத் தெரியும் அம்மா. இனி எதுவும் இல்லை. எல்லாம் முடிஞ்சு போச்சு', மீராவே பேசினாள்.

''தெய்வமே என் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்தயே'' என்று கடவுளுக்கு நன்றி செலுத்தலானேன் நான். மீரா தொடர்ந்து பேசினாள்.

''நீங்களும் ஏன் அவரும்கூட நினைப்பது போல சாதி என்ற அர்த்தமற்ற சம்பிரதாயத்துக்காக நான் இந்த முடிவுக்கு வரவில்லை. காதல் என்பது ஒருவனுடையதும் ஒருத்தியுடையதுமான இதயங்கள் சம்பந்தப்பட்ட விஷயந்தான். ஆனால், அந்த இரண்டு இதயங்களின் மலர்ச்சிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் கடமையைப் புறக்கணிக்கும் போது காதல் காமமாகிவிடுகிறது. அம்மா'' அம்மா நான் அவரைத் திருமணம் செய்வது எவருக்குமே விருப்பமில்லை; ஐயாவும் இல்லாமல் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு என்னை ஆளாக்கியிருக்கிறீர்கள். இவ்வளவு காலமும் திரும்பிப் பார்க்காமல் இருக்கிற உறவுக்காரர்களை நம்பி உங்களையும் தம்பி, தங்கைகளையும் நிர்க்கதியாக்கிவிட்டு அவருக்குப் பின்னால் நான் போயிடமாட்டேன்...''

நான் அவசரமாக ஏதோ கூற வாயெடுத்ததும் அவள் ஒரு உயிரற்ற சிரிப்புச் சிரித்தாள்.

''தெரியும் அம்மா; எந்த விதத்திலும் என் வாழ்வை நீங்கள் பலி கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்! பிரச்சினை இங்கே மட்டுமல்ல; என்னைக் கடமை அழைப்பதுபோல அவரையும் கடமை அழைக்கிறது. உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண் எனபதைத் தவிர, என் கூட ஒரு சதத்தையும் சீதனமாகக் கொண்டு செல்ல என்னால் முடியாது. அவருக்கு நான்கு தங்கைகள் தங்கள் சொத்தை எல்லாம் அண்ணன் படிப்பதற்காக விட்டுக்கொடுத்துவிட்டு வாழ்வுக்காக அண்ணனையே எதிர்பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். இப்போது அவர் காதலுக்காக அவரையும் தியாகம் செய்துவிட முடியுமா அம்மா? முடிந்தாலும் அப்படிப்போவது சரியா அம்மா? அவருக்கு இது புரியவில்லை. இதில் அதைத்தான் புரியவைத்திருக்கிறேன் இனிக்குழப்பமில்லை.''

இவ்வளவையும் ஒரே மூச்சில் கூறிவிட்டு 'வாருங்கள் சாப்பிட' என்றால் மீரா இதை அவள் எத்தனை துக்கத்தோடு கூறினாளோ அத்தனைக்கு நான் அதை உணரவில்லை! இது ஒரு 'இளமைக்கனவே

படிப்பகம்

padippakam



என்றும் காலப்போக்கில் மறந்துவிடுவாள் என்றும் எண்ணியவளாக அவளுக்குச் சாப்பாடு போட அழைத்துச்சென்றேன்.

அதன் பிறகு ஒருநாள் என்மாமனார் எங்கள் வீட்டிற்கு வந்த போது மீராவுக்கு ஏற்ற மாப்பிள்ளை ஒருவன். இருக்கிறான் என்றும், பார்க்கலாமா என்று கேட்டார் நான் ''மீராவிடம் கேளுங்கள்'' என்று தூண்டினேன். என்ன சொல்லிவிடுவாளோ என்று உள்ளூர எனக்குப் பயம் தான். மாமா சொல்லச் சொல்ல மீரா பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். எதிர்த்து எதுவும் சொல்லவில்லை. அந்தத் தைரியத்தில் நாலுவார்த்தை மாமாவுக்கு அனுசரணையாகப் பேசினேன். மாமா போய்விட்டார்

அன்று மீரா மீண்டும் குப்புறப் படுத்துக் கொண்டு விட்டாள். சாடையாக விம்மிக் கொண்டிருக்க வேண்டும். நான் போய் 'மீரா' என்று கூப்பிட்டதும் ஹோ என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

பழைய ஞாபகம் மறக்கவில்லை. என்று தெரிந்தது. என் கைகளை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு அழுகையும் விம்மலுமாக வெடித்தாள்.

''அம்மா அவர் தாழ்ந்த சாதிக்காரர் என்பதால் என் கைபிடிக்கத்தான் மறுத்தீர்கள். ஆனா, அதேகாரணத்துக்காக என் இதயத்தில் வாழுகிற தகுதிகூட அவருக்கு இல்லை என்று நினைக்காதீங்க அம்மா. அவரை மறந்துட்டு இன்னொருத்தரைக் கல்யாணம் செய்துகொள்வது இந்த ஜன்மத்தில் என்னால் முடியாது.'' பெரிய விம்மல் ஒன்றைச் சமாளித்துக் கொண்டு பேசினாள்.

''ஸ்ரீதரனையே நினைத்துக்கொண்டிருந்த மீராவை ராணாவுக்கு கட்டிவைத்தாங்களே என்னத்தக் கண்டாங்க? அவளைச்சாகடிக்கத்தான முடிந்ததே தவிர அவன் நினைவைப் பிடுங்கிவிட முடிந்ததா அம்மா? சிறிது நேரம் என் கைகளைப் பிடித்தபடி விம்மினாள். பின் சிறிது சிறிதாக விம்மல் தணிந்தது. என் கைகளை விடுவித்துவிட்டு அழுகைக்கலப்பற்ற குரலில் எங்கேயோ பார்த்துக்கொண்டு பேசினாள்.

நான் பச்சைக்குழந்தையில்லையம்மா; கிட்டத்தட்ட என் வயதில்தான் திலகவதியார் கலிப்பகையாரை இழந்திருக்கலாம். அவருக்கிருந்த மன உறுதியையும் நியமத்தையும் அந்த யுகத்துக்கே சாசனமெழுதியாச்சாம்மா? வழிகாட்டிகள் என்று அவர்களையெல்லாம் உயர்த்தி வைத்து விட்டு கண்மறைவில் நின்றுகொண்டு தவறு செய்யும்படி கேட்பது நியாயமாகுமா அம்மா?''

எனக்கு மீராவின் முகத்தைப்பார்க்கத் தைரியமில்லை இவள் எவ்வளவு தெளிவாகச் சிந்தித்திருக்கிறாள்? இத்தனை பெரிய மனப்பக்குவம் இத்தனை சிறிய மீராவிடம் வாய்த்திருக்கிறதை வியந்த அதே சமயம், வாழ்க்கையின் மிச்சமிருக்கிற பகுதியின் மேடு பள்ளங்களிலெல்லாம் தன்னந்தனியவளாக மீராவை எண்ணிய போது எனக்கே மிரட்சியாய் இருந்தது. திலகவதியார் வாழ்ந்த யுகமா இது? ''உன் உள்ளத்திலிருக்கிற உன்னதத்தைச் சமுதாயம் புரிந்து கொள்ளாதே மீரா. பழி சுமத்தி வீழ்த்தி விடுமே'' என்று மட்டும் சொன்னேன்.

அவள் சிரித்தாள்.

படிப்பகம்

padippakam



''என் மனதில் இருக்கிற உன்னதத்தைச் சமுதாயம் உதாசீனம் செய்யும் என்பதற்காக அது திரைபோட்டு முடிவைக்கிற பல வீனங்களுக்கு நான்தோற்றுவிடவேண்டுமா அம்மா? ஆயிரம் இதயங்களின் பலவீனங்களுக்கு வக்காலத்து வாங்குகிற விதத்தில் தான் இந்தக் காலத்துச் சமுதாயம் இருக்கிறதே ஒழிய, ஒரு சில இதயங்களின் பலத்துக்கு மதிப்புக் கொடுக்கிற விதத்தில் இல்லையே! எல்லாச் சராசரி இதயங்களினுடையவும் பலவீனங்களுக்குப் போடப்படுகின்ற திரை எனக்குத் தேவையில்லையம்மா. என் மனதுக்கும் ஆத்மாவுக்கும் சரி என்று படுகின்ற இந்த வழியில் வாழ்ந்து, கடைசிக்கட்டத்தில் ஆண்டவன் முகத்தைத் தைரியமாக என்னால் பார்க்க முடியும் என்றால் எங்களுக்கோ சமுதாயத்துக்கோ என் ஆத்மாவை விற்றுவிடுவதில் எந்தவித நியாயமுமே இல்லையம்மா!

நான் மீராவைப் பார்த்தேன். ''ஆண்டவன் சந்நிதியில் யுகங்கள் கணக்கல்ல அம்மா! மனங்கள்தான் கணக்கு'' என்று சொல்கிற திலவதியாராக அவளை உணர்ந்தேன். ஆசையுடன் வளர்த்த பெண் சந்நியாசினி போல் போகிறாளே என்ற துயரத்தையும் மீறி, இந்தத் தலைமுறையிலும் மென்மையான பெண்மை தனக்கே உரிய பலத்தோடு வாழ்கிறது என்று உணர்ந்த திருப்தி அலையாக எழுந்தது.

---

கவிதா! ஈழத்து சிறுகதை உலகில் பரவலாக விமர்சிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர்களுள் இவர் முக்கியமானவர், கலக்கமுறாத, கொந்தளிப்பற்ற உணர்ச்சிவடிவம் தாங்கிய, மொழியின் கையாள்கையை இவரது கதைகளில் நாம் காணலாம் நீண்ட இடைவெளிக்குப்பின் இலக்கிய விதிக்கு எம்மால் கொண்டு வரப்படுகிறார். இவரது சிறுகதை தொகுதியொன்று விரைவில் வெளிவரவிருக்கிறது

-ஆசிரியர்-

---

சுந்தர ராமசாமியின் குறிப்புகளிலிருந்து . . . .

எனக்கொரு பயம் - அதென்ன பயம், அதன் மூலம் என்னை, இல்லாமலாக்கி விடுவானோ என்ற பயம் மேகங்களை கலைப்பவன் அவன். என் காதலியின் புன்முறுவலில் நான் மதி மயங்கி நிற்கும் போது இது புன்முறுவல் அல்ல பொய் என்று அவன் - செல்லக் கூடுமென்றால்......

காலத்தின் இறுதியில் மிக மோசமான கட்டத்தில் வந்து நிற்கிறேன். இயந்திரங்களால் பிழியப்பட்டு, கனவுகள் வெளியே வழிந்து போனதில் இறுகிப் போன சக்கை மனங்களாக என்னால் இவர்களுடன் உறவாட முடியாது!

''ஆண்டவன் பாவத்தை மன்னித்து விடுகிறான்,
இல்லாவிட்டால் சுவர்க்கம் முழுவதும் காலியாகத்தான் இருக்கும்''

- ஜேர்மன் -

படிப்பகம்

padippakam



# நானுமொரு கனவாய்ப் போவேனா . . . . ?

☆ யெம். பௌஸர்

நேற்று முடிந்து விட்டது. இன்று இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இன்று முடியும் போது நாளை தொடரும். முடிவற்ற ஜீவிதத்தின் மடியில் நான் உழன்று கொண்டிருக்கிறேன். வாழ்வை எழுதிய பிரம்ம தேவன் அப்படியென்ன எனக்கு மட்டும் இந்த வாழ்க்கையை தந்தானா? இக்கேள்வி என்னுள் வியாபித்து எழும்; நெஞ்சு நோகாது ஆனால் வெடித்துவிடும் போல் இருக்கும்; சர்வமும் அடங்கிப்போக நான் மட்டும் தனியாக எத்தனை இரவுகளில் அழுது கொண்டிருப்பது.?

போன வருஷமும் இதே பௌர்ணமி இரவில், அலை அடிக்கும் இந்த கடற்கரை மணலில் இதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்; இன்றும் இதைப் பற்றியே சிந்திக்கிறேன். போன வருஷத்திற்கு முந்திய வருஷமும் அதற்கு முன்பும் எங்கேயோ ஒரு இடத்தில் கால்மாட்டில் தலையைப் புதைத்துக் கொண்டு மணிக்கணக்காக இருந்து சிந்தித்ததாக ஒரு ஞாபகம்; இல்லை உண்மை. இருந்தும் என்னையே நான் ஏமாற்றிக் கொள்பவனாக இருக்கிறேனே தவிர, இதற்கொரு முடிவைக் காணவில்லை. முடிவென்பது எது என்பதுதான் பிரச்சினை,

மரணம் முடிவாகுமா என நான் நினைக்கும் போது 'மரணம் முடிவல்ல அது உண்மை வாழ்வின் ஆரம்பம்' என்ற தத்துவம் என்னை அந்த முடிவிற்கு வரா மல் தடுத்திருக்கிறது; அப்படியாயின் எது முடிவு? முடிவைத் தேடியே என் கால்களும் நானும் இருபத்தி மூன்று வருஷங்களாக பயணித்திருக்கிறேன். இன்னும் நீ முடிவைக் காணவில்லையா? என்று நீங்கள் கேட்கலாம் நான் தேடும் முடிவை கண்டிருந்தால் இன்று இப்படி இருப்பேனா? என நான் உங்களிடம் ஒரு எதிர்க் கேள்வி கேட்க நேரிடும்.

மாறாக நான் முடிவைத்தேடி பயணித்திருந்த இந்த இருபத்திமூன்று வருஷங்களில் எனக்குத்தேவைப்படாத அல்லது நான் ப்ரியப்படாத பல விடயங்களை சந்திக்க நேர்ந்தது; அவைகள் என்னை பயங்கரமாக பயமுறுத்தின; நான் நினைத்ததை இல்லாமலாக்க அவை துணைபுரிந்தன; வாழ்வின் உண்மையான அர்த்தம் இவைகளை கடந்து போவதில்தான் இருக்கிறது என நான் ஒரு நாளும் எண்ணியதில்லை எல்லாமே இங்கு மாறிப்போய் விட்டன; காற்று, கடல், இயற்கை, பிரபஞ்சம் இந்த மனிதன் வரை மாறிப்போய் விட்டான்.

இவைகளெல்லாம் வெறும் போலிகள் மாயை என்று நான் சொல்ல வில்லை, இதற்கெல்லாம் ஒரு உண்மை விம்பம் இருக்கிறது அது எப்படி இருக்கும் என எண்ணியே நான் சுவாசித்துக் கொண்டிருக்கிறேன்; உண்மை விம்பம் என்றால், அது இங்கு நேரடியாக இல்லை என்றால் மனிதனிடம் இருக்கும் உண்மையான விம்பம் எது? வெளியில் புன்னகைத்து' அலங்கரித்து, தேனமுத வார்த்தைகள் பேசி திரிகிறானே அது இல்லையா?

நேற்றுக் கூட நான் ஒரு மனிதனிடம் ஏமாந்தேன், ஏமாற்றமென்றால் சாதாரன

படிப்பகம்

padippakam



ஏமாற்றமல்ல! யுகங்களின் முடிவிலும் மறக்க முடியாத ஒரு ஏமாற்றம், நான் இறைவனிடமும் ஏமாந்திருக்கிறேன். நேற்றுத்தான் மனிதனிடம் ஏமாந்ததாக இல்லை; இதற்கு முன்னேயும் ஏமாந்திருக்கிறேன். மனிதன் என்ன அப்படி மோசமானவனா? என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம்; என்னைப் பொறுத்தவரையில் அப்படித்தான் ஆண் என்றால் என்ன? பெண் என்றால் என்ன? எல்லோரும் ஒரே மாதிரிதான், இந்த உலகிலிருக்கும் போலிகளை நான் வெறுப்பது போல் வெறும் எலும்பாலும், சதையாலுமான இந்த மனிதர்களையும் வெறுக்கின்றேன். அவன் என்ன அப்படி நேசிக்கக்கூடிய ஜீவாத்மாவா? நானும் மனிதன்தான் ஆகவே நான் என்னையும் ஒரு கணமும் நேசித்ததில்லை, என்னை நான் முற்றாக வெறுப்பதன் மூலம் எங்கேயோ எனது தேடல் அடைபட்டுக்கிடக்கிறது. இதன் பயனும் வெறுப்பு முற்றிய தன்மையும் தான் என்னை எங்கேயோ ஒரு தனிமைக்கு ஒவ்வொரு நாளும் இழுத்துவரும்.

இப்போது நான் இங்கேயும் தனியாகத்தானிருக்கிறேன். மெல்லிய இருள் சூழ் -ந்த மண்படுக்கை, வானத்திலோ பௌர்ணமியின் பிரதிபலிப்பு, கடல் அலைகள் நிசப்தமான உறக்கத்தில், இந்த ஏகாந்தமான சூழ்நிலையை நான் விரும்புகிறேன். நாள்முழுதும் இப்படியே இருக்கலாம் போலத் தோனுது. ''இரவே நீ புலரக் கூடாது! என மனம் சொன்னது, காலங்கள் என்ன எனக்கு மட்டுமா சொந்தம்? பகலையும் அதன் தன்மையை விரும்புகிறவர்கள் இருக்கத்தானே செய்கிறார்கள; அப்படியென்றால் வாழ்வைப் போலும் இந்த இரவு நிச்சயமற்றது. முடியுமானால் இன்றையே நீ முழுவதையும் அனுபவித்துக் கொள் என்றது மனம் - நான் ஒரு கவிஞன் ஆவேசமாக எதையும் என்னால் அனுபவிக்க முடியாது! இது நான், இன்றுபோய் பௌர்ணமி எப்போது வருமோ? ஆகவே இந்த ரம்மியான இரவின் மடியில் என்னையே நான் இழந்திருக்கிறேன்.

ஒரு விதமான மயக்கம், உரத்துப் பாடனும் போல் இருக்கிறது; ''பாடல்'' அது மிகவும் சக்திவாய்ந்தது பாடனும் போல் தோன்றும் போதெல்லாம் அவளின் நினைவுவரும், அவள் பாடுவாள், என்தேகம் முழுதும் மெய் சிலிர்க்கும் காலமெல்லாம் அந்த மோனகையின் பாடலின் சோகத்தில் உறைந்துபோய் கிடக்கலாம் போல் இருக்கும். இமைகள் மெல்ல இறங்கி விடும்.

நீங்கள் அந்தப் பாடலை கேட்டிருக்கிறீர்களோ இல்லையோ நான் கேட்டிருக்கிறேன் உலகின் நிச்சயமற்ற தன்மை அவள் பாடும் போது, மட்டும் எனக்கு ஏற்பட்டதில்லை என்ன குரல் அது, என் மனசைப் பிழியும்

அவளது பாடலை மற்றவர்கள் பாடும் போது எனது ஆத்மா விறைத்துப் போய் விடும் நான் சொல்வேன்.

''குத்து விளக்கில் சிகரட் பற்றவைக்காதீர்கள்'' என்று, அந்தளவிற்கு நான் அவளது பாடலை நேசித்தேன். நான் மட்டுமே அவளது குரலை ரசிக்க வேண்டுமென்று கர்வப்பட்டேன்; அவள் பாடாத பொழுதுகளில் என் இமைகள் உறங்க மறுத்தது அப்படி என்னதான் அவளது குரலினுள் இருக்கிறது என்பது எனக்கு இன்னுமே புரியவில்லை.

படிப்பகம்

padippakam



இந்த நிலையில்தான் அவளிடம் நான் பேசினேன். காலம் காலமாய் பிரிந்திருந்தவர்கள் சந்தித்துக்கொள்வது போல் எனக்கிருந்தது மறைப்பதற்கு எதுவும் இல்லாத நிலையில் 'உங்கள் பாடல்தான் எனது ஊண், உயிர் என்றேன்; அவள் சிரித்தாள் அந்த சிரிப்பு என்னை வசீகரிக்கவில்லை, அவளது பாடல்கள்தான அவளது சிரிப்பை விட எனக்கு அர்த்தமாக விருந்தது. அவள் என்னிடம் சில நிமிடங்கள் இசையைப்பற்றி பேசினாள்; அதனுடைய தெய்வீகத் தன்மையைப்பற்றி சொன்னாள், 'இசையை ரசிக்காதவனிடம் எங்கோ ஒரு குறைபாடு இருக்கிறது.' என்றும் சொனனாள். இசையின் உயிர் எது என்றால்... நான் உணர்ச்சிவசப்பட்டு சொன்னேன் 'நீங்கள் தான் என்று' ஒரு கனம் ஸ்தம்பித்துப்போய் விட்டாள். இப்போது இருக்கும் எந்த சினிமா இசையமைப்பாளர்களைப்பற்றியும். பாடலாசிரியர்களைப்பற்றியும். நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. போய்வருகிறேன். என கைகளைக் குவித்துக்கொண்டே போய்விட்டாள்

நான் அதனை இன்றுவரை மனசு பிசிறடிக்காத வகையில் இரகசித்துக்கொண்டுதான் இருக்கிறேன்; என்ன அபிநயம், பெண்களுக்குரிய லட்சணம் அனைத்தும் அவளிடம் இருக்கிறது. என நான் நினைப்பதில் தவறில்லை, காலமெல்லாம் அவளது கால் மாட்டிலே இருக்க வேண்டும் போல் மனசு அழுத்தியது. இதனை நான் 'காதல்' என்று சொல்ல வில்லை, இந்த உறவுக்கு என்ன பெயர்தான் என்பது எனக்கு இன்னும் புரியவில்லை...

அவள் எப்போது பாடுவதை நிறுத்துவாளோ அப்போது நான் இந்த உலகிற்கு திரும்புவேன்.

இப்போது நான் இங்கில்லை.

---

நமது வாழ்க்கை எந்தளவிற்கு நவீனத்துவம் பெற்றிருக்கிறதோ, நமது சிந்தனைகளும், கண்ணோட்டங்களும் எந்தளவு நவீனத்துவம் கொண்டிருக்கின்றனவோ, அந்தளவுக்குத்தான் நமது கலைகளும் நவீனத்துவம் பெறமுடியும் - இதை இன்னொரு மாதிரியும் சொல்லலாம் ஒரு சமூகத்தின் சிந்தனைகளும், கண்ணோட்டங்களும் நவீனமுற்றிருக்கிறது. என்பதை அந்த சமூதாயத்தின் தற்கால கலா முயற்சிகளிருந்தும், இலக்கிய சாதனைகளிலும் காணலாம். கலைகளின் உருவத்தில் மட்டுமல்லாமல் அதன் உள்ளோட்டத்திலும் அது புலப்படும்.

(ஜெயகாந்தனின் நாவலிலிருந்து)

அரபு பெண் கவிஞர் ''பத்வா நுகான்'' இன் கவிதையிலிருந்து . . .

நசுக்கப்பட்ட உன் நம்பிக்கையிலிருந்து
ஒடுக்கப்பட்ட உன் வளர்ச்சியிலிருந்து
திருடப்பட்ட உன் குழந்தையின் சிரிப்பிலிருந்து

திருடப்பட்ட உன் முறுவலிலிருந்து
சிதைவுகளிலிருந்து
சித்திரவதைகளிலிருந்து
இரத்தம் உறைந்த சுவர்களிலிருந்து
வாழ்வினதும், மரணத்தினதும், நடுக்கங்களிலிருந்து
புதிய வாழ்வொன்று கிளர்ந்தெழும்.

படிப்பகம்

padippakam



# இரு கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்

☆கவிஞர் யுவன் ☆முகிதீன் பேக்

## கவிஞர் யுவன் சில நினைவுகள்

அ. ஸ. அப்துஸ் ஸமது (B.A)

சமீப காலம் வரை நம்மத்தியில் 'அருட்கவி' யென விளங்கி அற்புதமான கவிதைகள் நாடகங்கள் செய்து அனைவர் உள்ளங்களையும் ஈர்ந்து நின்ற கவிஞர் யுவன், இன்று அமர கவிஞராகி விட்டார். அவரது நினைவுகள் என்றும் நம் நெஞ்சை விட்டகலாதன.

25. 08. 1935ல் பொத்துவிலில் கல்விசார் குடும்பமொன்றில் பிறந்த யுவன் 05. 04. 1991ல் இவ்வுலகை நீத்தார். இவரது இயற் பெயர் எம். ஏ. கபூர் என்பதாகும். இவர் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் கற்கும் கால், கல்லூரியில் நடைபெற்ற "யுவன்" இதழுக்கு ஆசிரியராக விளங்கினார். அதன் பின் அதனையே தன் புனைப் பெயராகவும் ஆக்கிக் கொண்டார்.

200க்கு மேற்பட்ட கவிதைகள் 50 நாடகங்கள் 100க்கு அதிகமான கட்டுரைகள், சில சிறுகதைகள் என்று எல்லாத் துறைகளிலும் ஈடுபாடுள்ள யுவன், உணர்ச்சிகரமான சமூகப்பார்வையில் எழுதினார். இலங்கை வானொலி முஸ்லிம் பகுதியில் கவிதை நாடகத்தை முதன்முதலில் எழுதினார். 'அருட்கவி' என்ற அவரது கவிதா நாடகம் நேயர்களின் ஆதரவை பெரிதும் பெற்றது. இவரது கவிதைப் பொழிவுகளும் மிகுந்த ஆதரவை பெற்றன.

கவிதைத் துறையில் தன்னை முற்றாக ஈடுபடுத்திக் கொண்ட யுவன் அதில் பெரிதும் இலயீற்று நிற்பார். நறுக்குத் தெறிந்தாற் போன்ற கவிதைசார் வசனங்களில் இவர் எழுதிய நாடகங்கள், சீதனக் கொடுமை, பெண்கள் எழுச்சி, சமுதாய சீர்திருத்தம். பற்றிக் கூறுவனவாகும். நூரன வஞ்சும், அழாதே சிரி அருட்கவி சீனத், தியாகத் திருமகன், வேறு சொர்க்க மெதற்கு, திருந்தாத இதயங்கள் முதலியன இவர் எழுதிய வானொலி நாடகங்களாகும் அக்கரைப்பற்று விளாக்கிது (தற் பொழுது அல்முனவ்வறா) பாடசாலையில் இவர் ஆங்கில ஆசிரியராக இருக்கும் பொழுது மேடை நாடகங்கள் சிலவற்றையும் எழுதி அரங்கேற்றியுள்ளார்.

1957ம் ஆண்டு அக்கரைப்பற்றில் இயங்கி வந்த மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இவர் முக்கிய உறுப்பினராக இருந்து ஆற்றிய பணிகள் என்றும் மறக்க இயலாதனவாகும் சங்கத்தின் 'எழுத்தாளன்' கையெழுத்துப் பிரதிக்கு பிரதம ஆசிரியராக இருந்து செவ்வனே செயலாற்றினார். 1958ல் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கலை விஞ்ஞானப் பொருட்காட்சிக்கு இவரும், ஜனாப் எம்.ஐ ஜுனைதினும் அமைப்பாளர்களாக இருந்து செவ்வனே செயலாற்றினார். இவர்கள் அமைத்த 'தாமரை மகளிர்' என்ற நூதனக் காட்சி இன்னும் மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

எடுத்த வேலையை இரவு பகல் என்று பாராது அயர்ச்சியின்றி செய்து முடிக்கும் திறன் யுவனின் தனித்தன்மையாகும். இரவு 3மணி வரை எழுதிக் கொண்டிருப்பது இவருக்குச் சாதாரணமான விஷயம்.

படிப்பகம்

padippakam



கவிஞர் யுவனின் பாடல்கள் ஒரு வித வேகம் நிறைந்தவை. உணர்வு கொப்பளிப்பை அவர் பாடும் பொருள் பக்தியாக, காதலாக, சமூகப் பார்வையாக எதுவாக இருப்பினும், இந்தப் பண்புகள் வீறு பெற்று நிற்கும், ஒரு பாடலில் இஸ்லாத்தின் பால் ஒரு அழைப்பு விடுக்கிறார். அதில் மேலோங்கி நிற்கும் ஆவேசம் இங்கு நாம் நோக்கத்தக்கது.

''குத்துபவர் குத்தட்டும் கொடுமை செய்து
கொல்லுபவர் கொல்லட்டும் ஏழைமக்கள்
எத்திக்கும் தாழ்வுபெற்றுத் தவிக்கும் இன்று
இணையற்ற இஸ்லாத்தின் பெருமை போற்றி''

என்கிறார் கவிஞர். இவரது பாடல்களில் சமூக உணர்வு, பெண்மை உரிமையும் பெரிதும் இடம்பெறுகின்றன. இவரது வானொலி கவிதைப் பொழிவென்றில் யூசுப் - சுலைகா காதலை அற்புதமான உணர்ச்சிக் காவியமாகச் சித்தரிக்கிறார் அதில் காதலின் சிறப்பு, பெண்மையின் மேன்மையும் வெகுவாக விதந்தோதப் படுகின்றன. பெண்மையின் சிறப்பு பற்றிய அவரது தனிப்பாடலொன்று வருமாறு:-

''மண்ணுக்குப் பெண் என்ற பெருமையுண்டு
மானிலத்தில் மாதாவாய்ப் போற்றுகின்றோம்
கண்ணுக்குள் ஒளியான பெண்ணினத்தை
கடைச் சரக்காய் கருதுவது கொடுமையன்றோ
புண்ணுக்கும் புணுததனைத் தடவுதல் போல்
புதுயுலகு மாதரைநாம் புறக்கணித்தால்
எண்ணத்தில் ஒளி எங்கும் வீசிடாது
இருள்நிறைந்த குகையாக வையம் தோன்றும்

இப்படிப் பெண் உரிமைக்காகவும் உயர்வுக்காகவும் தன் கவிதையாற்றலைப் பயன் படுத்தி பாடுகிறார் கவிஞர்.

கவிஞர் யுவனின் பாடல்கள் வேகமும். உணர்வும் வீறு பெற்று விளங்கும், அவர் பாடும் பொருள் பக்தியாக காதலாக

''சொல்லடி சிவசக்தி என்னை சுடர்மிகும்
அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மானுடம் பயனுற வாழ்வதற்கே.''

என்று பாரதி தன் ஆற்றலால் உலகம் பயன் பெற சக்தியை வேண்டுகிறார். அதுபோல கவிஞர் யுவனும் தன்வாழ்வைச் சூழ்ந்துள்ள துயரமெல்லாம் அகல வேண்டும். தன் ஆற்றல் மேலோங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுவது இவரது வழக்கம். வானொலிக் கவிதை பொழிவிலும் மேடை கவியரங்குகளிலும், உணர்ச்சி பூர்வமான ஓர் இறை வாழ்த்தைச் சொல்லியே கவிதையை தொடங்குவார்.

ஒருநாள் பௌர்ணமி நிலவிலே இவர் ஓரிடத்தில் அமர்ந்திருந்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார். இவரைக்கண்ட புத்த சாது ஒருவர் இவரை அழைத்துச் சென்று மகனே; உனக்கென்ன கவலை; உனக்கு வேண்டுவது என்ன? என்று கேட்டு புத்தி மதிகள் பல கூறுகிறார்.

''காலத்தாய் கண்திறப்பாள் மகனே; வீணோ
கவலை கொண்டு அணுவணுவாய் சிதைந்திடாதே!
ஆலங்கனி தரும் வித்தின் உள்ளே உள்ள
அதி பெரிய விருட்ச மொத்த சிந்தனைகள்
மேலதிக எனக்குண்டு மேதையாவாய்
மேன்மைமிகும் எதிர்காலம் உனக்கு உண்டு
பாலமாய் நீ மாறிப் பழமையோடு
பலர் போற்று புதுமைக்கு எழுது இன்றே!''

படிப்பகம்

padippakam



புத்த சாது கூறிய இந்த அறிவுரையால் உணர்வு பெற்ற கவிஞர், புதுமனிதனாய் புதுச்சிந்தனை பெற்றவராக வீடு திரும்புகிறார். கவிஞர் இவ்வாறான தன்னுணர்வுக் கவிதைகள் பலவற்றையும் பாடி தன்பாடல்களால் இந்த வையம் பயனுற வேண்டும் என்றும் தன் ஆற்றல் மேலோங்க வேண்டுமென்றும் அவாவி நிற்கிறார் கவிஞர். அவருடைய கனவுகள், கற்பனைகள் அவருடைய வாழ்வில் எவ்வளவுக்கு கை கூடிற்று என்பதை விட, அவருடைய உயர்ந்த சிந்தனைகள், நியாயமான ஆசைகள் அவரை உயர்ந்ததோர் கவிஞனாக இனம் காட்டிற்று எனலாம்.

கருவிலே திருவுடையவர் கவிஞர் யுவன். அவருடைய தந்தையார் மீராலெவ்வை உபாத்தியாயர் ஒரு கவிஞர் அவருடைய தம்பி, கவிவாணன் அஸீஸ் ஒரு கவிஞர் ஆதலால் இவர் சிறந்தவோர் உணர்ச்சிக் கவிஞராகத் திகழ்ந்ததில் வியப்பில்லை.

திருகோணமலை, யாழ்பாணம் அம்பாறை முதலாம் இடங்களில் வைத்திய சுகாதார அத்தியட்சகர் காரியங்களில் இலிகிதராகக் கடமையாற்றி ஒய்வு பெற்ற யுவன், ஆங்கிலத்திலும் நல்ல புலமைபெற்றவராக விளங்கினார். இவருடைய ஆற்றலுக்கும், சுபாவத்திற்கும் இவர் ஆரம்ப காலத்தில் கடமையாற்றிய ஆசிரியர் பணி சிறந்ததாகும். இப்பதவியில் இவர் நிலைத்திருந்தால் மாணவ உலகம் அதன் பயனைக் கூடியளவு பெற்றிருக்கும்.

தகவல்: எம்.எல்.ஏ. ஹசன்
பொத்துவில்

☆ முஹிதீன் பேக்

- ராம் -

''டெய்சி டேனியல்'' என்ற பெயர் தாங்கிய யாழ்ப்பாணத்து தமிழ் மாது ருக்மணி தேவியாகப் பரிணமித்து சிங்கள இசையுலகில் கீர்த்தி பெற்ற குயிலாகி சிங்கள மக்களின் நெஞ்சத்தை கவர்ந்ததைப் பற்றி கருத்துத் தெரிவித்த நடிகர் காமினி பென்சேகா ''அவர் எங்களுடைய சகோதரி'' என்று கூறியது கலை பற்றியும் கலைஞர்கள் பற்றியும் கலைஞன் எவ்வாறு குறுகிய வரம்புகளுக்கு அப்பால் நின்று பார்க்கிறான் என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

ருக்மணி தேவிக்குள்ள ஸ்தானத்தை சிங்கள மக்கள் மத விசுவாசத்தில் முஸ்லிமான முஹிதீன் பேக்குக்கும் அளிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

முஹிதீன் பேக் சிம்மக் குரலோன், அவரது ஆயிரக்கணக்கான சிங்கள பாடல்களில் அநேக பௌத்த பக்தி கீதங்களும் உண்டு. மெஹிதீன் பேக்தான் ''புத்தம் சரணங் கச்சாமி'' என்ற பக்திப்பாடலைப் பாடி பௌத்த மக்களின் உள்ளத்தில் பக்தி பரவசத்தை ஏற்படுத்தியவர்

கடந்த மாதம் மற்றுமொரு சிங்களப் பாடகர் ''மில்டன் பெரேரா'' மரணமானார்.

நான்கு பாடகர்களை முஹிதீன் பேக்குடன் இணைத்துப் பேசலாம் தர்மதாச வல்பொல, ஷெல்டன் பெரேரா எச். ஆர் ஜோதிபால மற்றும் மில்டன் பெரேரா இவர்களை ஒரு தகப்பனின் பார்வையில்

படிப்பகம்

padippakam



மொஹிதீன் பேக் அனுகினார். முதல் நால் வரும் இசை உலகை விட்டு போய்விட்டனர். இன்று பிதாவும் மறைந்து விட்டார் அத்துடன் ஒரு யுகமும் மறைந்து விட்டது.

முஸ்லிம் மக்கள் மத்தியில் அவருக்கு மதிப்பு இருந்ததா? அபிமானம் இருந்ததா? அவர் பௌத்த பக்தி கீதங்கள் பாடியது இதற்கு தடையாக இருந்ததா? யார் யார் என்ன நினைத்தாலும் மொஹிதீன் பேக் என்ற பாடகர் இந்த நாட்டின் சிங்கள முஸ்லிம் மக்களுக்கிடையில் நட்பையும் சௌகன்யத்தையும் நிலவுவதற்கு ஆற்றிய பங்கு வெகுகாலம் நிலைத்திருக்கும்.

கடந்த பெப்ரவரி மாதம் மர்ஹூம் அல் ஹாஜ் மொஹிதீன் பேக் அவர்களுக்கு முஸ்லிம் கலாச்சார பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் அல்-ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் அவர்களின் இசையியல் துறைக்கு கலாச்சார விருதும், பணமுடிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

---

கலைஞர்களை ஒரு சமூகம் மதிக்கத் தவறக் கூடாது. அவன் வாழும் போதும், அவன் இறந்த பின்னும் அவன் எம்முடனேயே வாழ்கிறான். கலையை நேசிப்பவர்கள் கலைஞர்களை என்றும் ஆதரிக்க வேண்டும். நடைமுறை சார்ந்த இலக்கிய முயற்சிகளில் அவர்களை நாம் நினைவு கூர்வது நிகழ்காலத்தில் அவர்களை நம்முடன் வாழச் செய்யலாம் அந்த வகையில் மறைந்த கலைஞர் யுவன் அவர்களும் ஈழத்து இசை உலகில் மதுரக் குரலோன் அல்-ஹாஜ் மொஹிதீன் பேக் அவர்களும் கலையுலகில் நினைவு கூரத் தக்கவர்களே!

தடத்தின் ஒவ்வொரு இதழிலும் மறைந்த கலைஞர்களுக்கு அஞ்சலி செலுத்த நாம் எண்ணியுள்ளோம். உங்கள் பிரதேசத்தில் மறைந்து போன கலைஞர்களது விபரங்களை எமக்கு நீங்கள் அனுப்பி வைப்பதன் மூலம் நாம் இந்த பணியில் தொடர்ந்து செல்ல நீங்கள் எமக்கு ஆதரவு வழங்குங்கள். உங்கள் தகவல்களுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்.

தடம் 2 இல் கவிஞர் யுவனைப் பற்றி கட்டுரை எழுதிய எழுத்தாளர் அ. ஸ. அப்துஸ் ஸமது அவர்களுக்கும் 'முஹிதீன் பேக்'கைப் பற்றி தகவல் தந்த தினகரன் ''களம் கலம்'' பகுதி தயாரிப்பாளர் ராம் ரஹீம் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

- ஆசிரியர் -

படிப்பகம்

padippakam



## பாதுகாப்பு:

-யூ. எல். முகமட் அபார்-

உன்னை - நீ
பத்திரப்படுத்திக் கொள்
இது -
ஆசர்பாசங்கள் அதிகரித்த காலம்.

☆

நம் நாட்டின் -
அழகியெல்லாம் -
இப்போது -
தலைமறைவாகிவிட்டனர்-
தன் -
கற்புக்கு பாதுகாப்பாய்.

☆

நீ மட்டும் -
இது -
சுதந்திர நாடு என்று எண்ணி
உன் அழகை -
வெளியில் அரங்கேற்றிக் கொள்ளாதே!

☆

நீ!
கறுப்பாடையால் போற்றி
இருட்டறைக்குள் உறங்கிகொள்.

☆

நான் மட்டும் -
நடுராத்திரியில்
ஒரு தேவதூதன் போல்
உன்னை வந்து -
பார்த்துக் கொள்வேன்.

☆

(ஒரு கற்பழிப்பு நிகழ்வுக்காய்
எழுதப்பட்ட கவிதை இது)

## "பௌஸரின்" இரு கவிதைகள்

### இதுவுமொரு விதி

சர்வ வியாபகமும்
உன் ஜெபம்தான்
நீ மட்டும் ஏன்
என் கல்லறைக்கு
மலர் வளையம்
சாத்த விரும்புகிறாய்?

என் ஜெபமும்
உன் விருப்பும்
ஒரு முரண் தொடை
என்றாலும் - - - -
நான் உன்னையே
என் தொட்டிலாக்கி கிடக்கிறேன்.

(நேற்று)

☆

### வாழ்க்கை

நியாய சபை திரித்த
தூக்குக் கயிறில்
தொங்கித் தொங்கி
இந்த
கருப்பை தயாரித்த
எலும்பு விலங்கு
தினமும்
செத்துக் கொண்டிருக்கிறது.

(இன்று)

படிப்பகம்

padippakam



## வந்து விழுந்த பூமாலைகளிலிருந்து . . .

கிழக்கு மாகணத்திலிருந்து புதிய மொட்டு இதழ் விரித்திருக்கிறது.

அந்தனி ஜீவா (அறுசுவை)
தினகரன்

இலங்கை சிறு சஞ்சிகை வரிசையில் ஒரு 'தடம்' இது

கிழக்கு மாகாணத்திலிருந்து காலம் காலமாக பல தரமான சிறு சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன அந்த வகையில் "தடம்" சஞ்சிகை நாம் சிநேகபூர்வமாக சுட்டிக்காட்டிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டால் சிறு சஞ்சிகை வரலாற்றில் தடத்திற்கும் ஒரு இடம் கிடைக்கும் என்பதை தடம் குழுவினர் நிட்சயமாக எதிர்பார்க்கலாம்.

இதற்காக "தடம்" குழுவினர் தரமான பல சிறு சஞ்சிகைகளுடன் வாசக உறவு நிலையினை வளர்த்துக்கொண்டு தடம் இதழுக்கான படைப்புகளை தேர்ந்தெடுப்பதிலும் கவனம் செலுத்தினால் ஆர்வம் மிக்க, தேடல் மிக்க இவ் இளைஞர்களின் முயற்சி சிறப்பாக அமையும், இவர்களது உழைப்பு வீணாகாதவாறு அவர்களது முயற்சிக்கு கலை இலக்கிய ஆர்வலர்கள் ஆதரவு வழங்க வேண்டியது முக்கிய கடமையாகும்.

'தடம் பத்திரிகை விமர்சனத்தின் போது'
மேமன் கவி

தினகரன் - 1992

தாங்கள் 'தடம்' தனிற்காய் பூண்டுள்ள கொள்கைப்பாடானது, மிகவும் போற்றத்தக்கதென்றே, இக்கொள்கைப்பாடானது வெற்றியளித்து நின்று நிலைத்து எதிர்காலத்தில் ஏற்றதொரு தடத்தைப்பதித்து காத்தீர இயல்புடன் மருவீச இறைவனை வேண்டுகிறேன்.

மௌலானா ஏ மஜீட்
சம்மாந்துறை

பிரச்சனைக்குரிய கால கட்டங்களில், பிரச்சினைக்குரிய பகுதியில் இருந்து ஒரு இலக்கிய சஞ்சிகை யதார்த்தங்களை சுமந்து வருகின்றது என்பதால் அதை நாம் பெருமையாக கொள்ளல் வேண்டும். என்பதும் பாராட்டப்படல் வேண்டும் என்பதும் முக்கியமே. அந்த வகையில் நான் தடத்தின் வெற்றிக்கு பிரார்த்திப்பதோடு, தடம் இலக்கிய உலகில் விட்டென பிரகாசிக்க வேண்டும். தடத்தின் வெற்றி ஒரு தார்மீகமான வெற்றிக்கு வழி வகுக்க வேண்டும். என்பதும் என் பிரார்த்தனை ஆகும்.

நிலாவாசன் (அஷ்ரப்கான்)
முர்தலாமுல்ல

படிப்பகம்

padippakam



கிழக்கின் இலக்கிய வளர்ச்சி ஓகோ என்றிருந்த கதை இப்போது சற்று வீழ்ச்சி அடைந்திருப்பது கண் கூடு, நிறைய வெளிவந்த இலக்கிய ஏடுகள் இன்றில்லை. மிகவும் கவலைதரும் விடயம் இது, இன்றைய பயங்கரமான இந்த சூழ் நிலையில் துணிந்து நின்று 'தடம்' பதிக்க தாங்கள் இறங்கி இருப்பதை எண்ணி நான் புளகாங்கிதம் அடைகிறேன். 'தடம்' இலக்கியத்தில் மீண்டுமொரு அத்தியாயத்தை ஆரம்பிக்க எனது வாழ்த்துக்கள்.

எம். எம். நௌபாத்
சம்மாந்துறை

வாழ்த்துக்களும் வந்தனங்களும் தடம் I ஐ பார்க்கக்கிடைத்தது. வித்தியாசமான தரமான முயற்சி, அமைப்பிலும் வித்தியாசம் ஓர் அழகு, பொதுவாக இலக்கிய ஆர்வலர்களால் அநேகம் விரும்பி வரவேற்கப்படும் என நினைக்கிறேன். இரண்டாவது இதழை எதிர்பார்த்து

எம். கே. எம். ஷகீப்
ஜாமியா நழிமிய்யா

உங்கள் பணி மேலும் வளர ஒரு இலக்கிய ஆர்வலர் என்ற ரீதியில் உங்களை வாழ்த்துகிறேன்.

செல்வி இரா ரோகினி
கொழும்பு - 13

'தடம்' எதிர்பார்த்ததை விட திருப்திகரமாக இருந்தது.

யு. எல். நஜீமா
பண்டாரவளை

தடத்தை படித்த அந்த நொடிகளினுள் மனதில் இடம் பிடித்து விட்டது. முதன் முதலாக என்னில் திருப்தியான மாற்ற அசைவுகளை ஏற்படுத்திய பெருமை இதையே சாரும் தலைமுறைப் பிறவிகளை காத்திராது இரசிகர்களின் நெஞ்சத்தில் மட்டுமல்ல ஈழத்திலும் ரணங்கள் பதித்து நிலைக்க இறைவனை பணிகிறேன்.

எம். யே. றியாஸ்
டீன்ஸ் வீதி,
அக்கரைப்பற்று - 01

இது தரமான இலக்கிய முயற்சி, பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

எப். எம். பைறூஸ்
தினகரன் 1991

படிப்பகம்

padippakam



## போன அனுபவங்களுக்குப் பிறகு

டீன் கபூர்

மெய் சிலிர்த்தும் இதமான காற்று
மேற்கே நகரும் இளமஞ்சள் வெயில்
பள்ளிப் புறத்து பசுமை வயல்வெளி
எனக்கு மிச்சம் பிடித்துப் போகின்றன.

அந்தப் பிள்ளைகளுக்குப் பிடித்து விடுவதைப் போல
எனக்கும் பிடித்துப் போனவைதான்
அலைவாய்க் கரையில் கால் கழுவுதல்
காட்டு வட்டையில் பட்டம் விடுதல்
ஓயாமல் பெய்யும் மழையில் நனைவதெல்லாம்

எனக்கு இன்றும் மறந்திடவில்லை
அலைவாய்க் கரையில் கால் கழுவுகையில்
அலையின் அகண்ட வாய்க்குள் அகப்பட்டதும்
காட்டு வட்டையில் பட்டம் விடுகையில்
முந்திரியில் சிக்கி நூல் அறுந்ததும்
ஓயாமல் பெய்யும் மழையில் நனைந்ததில்
தலையிடியும் காய்ச்சலும் ஒருமித்து வந்ததும்.

இன்றைக்கு என்னதான் இருப்பினும்
இதமான காற்றும்
இள மஞ்சள் வெயிலும்
பசுமை வயல் வெளியும்
எனக்குப் பிடித்துப் போவதைத் தவிர
வேறு ஒன்றிலுமே
இப்போதைக்கு நாட்டம் என்பதற்கில்லை.

☆ சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், மொழிபெயர்ப்பு போன்ற ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கின்றோம். -ஆசிரியர்-

படிப்பகம்

padippakam


உங்களுக்குத் தேவையான

☆ பாடசாலை உபகரணங்கள்

☆ அழகு சாதனப் பொருட்கள்

☆ ஆங்கில டைப்பிங். ☆ மொழி பெயர்ப்பு.

☆ போட்டோ பிரதி. ☆ லெமினேற்றிங்.

சேவைகள் அனைத்திற்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

# PHOTO STAR

UDAYAR ROAD, AKKARAIPATTU - 02.




அடுத்த இதழ் " மே " மாதத்தில் வெளிவரவிருக்கிறது

உங்கள் ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். -ஆசிரியர்-

படிப்பகம்

padippakam

WITH BEST COMPLIMENTS

FROM

WHOLESALE AND RETAIL DEALERS

DHEENAP TRADING CENTRE

NO - 97, 98 SUPER MARKET
AKKARAIPATTU.

T.P. 067/7398
067/7438

Printed by. IPC Printers, Akkaraipattu.

படிப்பகம்